என்றால், அதற்காக ஏற்கெனவே உள்ள சுகாதார விதிமுறை கள்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். சுகாதார விதிமுறைகளினால் நடவடிக்கை எடுக்க முடியவில்லை யென்று விளக்கம் அளித்தால், அதைப்பற்றி ஆலோசிப்பதற்கு அரசு தயா ராக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 74, 75 இரண்டும் ஒருசேர எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

அரசு அச்சகங்கள்.

*74 **வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

கோவை நகரில் அரசாங்க அச்சகம் அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

*75 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there is a proposal to establish a Government Press at Dharmapuri; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு அச்சகம் ஒன்றை அமைக்க வேண்டுமென்கிற திட்டத்தை கொள்கையளவில் அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால், நிதிவசதி கிடைத்தவுடனே அந்தத் திட்டங்களைத் துவக்க வேண்டுமென்றும் அரசு முடிவு செய்திருக் கிறது. அதன்படி கோவையிலும், தர்மபுரியிலும் அந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும். தற்போது அதுபற்றி செயற்குறிப்பில் ஒன்றும் இல்லை. மதுரையில் மட்டும் அரசு அச்சகப் பணியினைத் துவங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, அரசாங்க அச்சகத்தி லிருந்து சில முக்கியமான குறிப்புகள் வெளிவருவதில் கால தாமதம் ஏற்படுகிறது. குறிப்பாக திருப்பூர் டவுன் பிளானிங் நெ. 5 அச்சடிக்கக் கொடுத்து, நீண்டகாலமாகியும் வரவில்லை. ஓராண்டுக்கு மேலாகிவிட்டது. நான் நேரில் சொல்லியும் பயன் இல்லை. மேலும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைகளை வழங்குவது பற்றிய லிஸ்ட் அச்சடிக்கக் கொடுத்தும் அச்சகத் திலிருந்து வரவில்லை. இப்படிப்பட்ட பல குறைபாடுகள் இருக்கின்றன. ஆகவே, மாவட்ட அளவில் அச்சகம் அமைக்க வழி செய்ய வேண்டும். குறிப்பாக இந்தத் திட்டத்தில் கோவை மாவட்டத்திற்கு முதலிடம் கொடுத்து பணியினைத் துவங்க அரசு முன்வருமா?